அறிவினா லாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் II.] SEPTEMBER, 1902–௵ செப்டெம்பர். [இலக்கம். 3.

கூடு பின்னும் குருவிகள்.

வாயில்லா ஜந்துக்களுக்குள்ள விசித்திரமான சக்தியைக் கண்டு நாம் ஆச்சரியப்படவேண்டுமானால், அதற்குக் கூடு பின்னும் பறவைகளைவிட வேறு திருஷ்டாந்தம் வேண்டுமோ? இத்தன்மையான பக்ஷிகள் நமது இந்துதேசத்திலே மிகவும் விசேஷம். நமது கட்டைவிரலளவே பரிமாணமுள்ளவையான மிகச் சிறு பறவைகள், குரங்கு பாம்பு முதலான கொடிய ஜந்துக்கள் வந்து தம்மைப் பிடித்துக்கொள்ளாதபடி அதிக ஜாக்கிரதையுடனே கூடு கட்டுகிற அதிசயத்தைப் பாருங்கள். அவற்றிற்குத் தம்மூக்கு ஒன்று தவிர வேறு துணைக்கருவி யொன்றுமில்லையே. அந்த மூக்கு ஒன்றினாலேயே அப்பறவை கூடு கட்டுவதற்கு வேண்டிய நார்களைப் பொறுக்கி யெடுத்துக்கொண்டு போய், ஒரு பெரிய மரத்து நுனிக்கிளையில், குரங்கு முதலியவை கால் வைக்கவும் கூடாத விடத்திலே கீழே தொங்கும்படியாக, அந்த நார்களே நூலாகவும், தமது மூக்கே ஊசியாகவும் கொண்டு கூடு பின்னுகின்றன. அக்கூட்டின் பக்கங்களெல்லாம் சிறிதும் சந்தில்லாமல் வெகு விசித்திரமாகவும் உறுதியாகவும்பின்னிப் பிணைத்து அதன் அடிப்புறமாகத் தமக்கு உள்ளே செல்ல மிகவும் சிறியதாய் வழி வைத்துக்கொள்ளுகின்றன. அதனுள் தாம் மெத்தென்று படுத்துக்கொள்ள மிகவும் மிருதுவான பஞ்சு முதலியவற்றால் மெத்தையும் அமைத்துக்கொள்ளுகின்றன. இப்படி மரத்தின் நுனிக்கிளையில் தொங்கும்படி கட்டுகிற கூடுகள் மனிதர்களுக்காயினும் மற்றெந்தப் பிராணிகளுக்காயினும் கைக்கெட்டாத தூரத்திலிருப்பதால், அவற்றில் அந்தச் சிறு பறவைகள் எவ்விதமான அபாயமுமின்றிச் சுகமாக வசிக்கின்றன. இப்படி மனிதனைப் பார்க்கினும் மேலான இயற்கை யறிவுள்ளனவாகப் படைக்கப்பட்ட பிராணிகளுக்குப் பொல்லாங்கு செய்யத் துணிகிறவன் கொடிய விலங்குகளிலும் கேடுகெட்டவனன்றோ!

எளிய ஜந்துக்களிடத்தில் அன்புடையனாதல் வேண்டும்.

எளிய ஜந்துக்களிடத்தில் அன்பு பாராட்டும்படி முக்கியமாய்ச் சிறு பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். அந்தப் பிராணிகளால் மனிதர்களுக்கு உண்டாகு முதவி இவை யென்பதையும், அவைக ளில்லாவிட்டால் மனிதர்களுடைய உயிர்வாழ்க்கை எவ்வளவு கேடுகெட்டதாகிவிடுமென்பதையும் அச்சிறுவர்களுக்கு நன்றாகப் போதிக்கவேண்டும். தோல், மயிர், பால் முதலியவைகளைக் கொடுப்பதற்காக நாம் அவற்றினிடம் எவ்வளவு நன்றியுடையவர்களா யிருக்கவேண்டுமென்பதையும் அப்பிள்ளைகளுக்கு அறிவிக்கவேண்டும். இதுமாத்திரமேயன்றி, தருமவிஷயமாக யோசிக்குமளவில், எளியவர்களை வலியவர்கள் பாதுகாப்பது பெரிய தருமமன்றோ? இதுவே மனிதர்களும் ஒருவர்க்கொருவர் கையாளவேண்டிய தருமமாம். ஆகையால், சிறுவர்கள் வாயில்லாத எளிய ஜந்துக்களை நேசித்துப் பாதுகாக்கக் கற்றுக்கொண்டால், பிறகு அவர்கள் ஒருபோதும் தம்மினத்தாரான மனிதர்கள் விஷயத்தில் கொடியவர்களாயிரார்கள்.

சிறுவர்களுக்கு ஜீவகாருணியமுண்டாகும்படி போதிக்கும் விதம்.

சிறுவர்களுக்கு ஜீவகாருணியமுண்டாக்கும் விதமெப்படி யென்றால், பசு பக்ஷி மிருகாதிகளுடைய அறிவு, அன்பு, உபயோகம் முதலியவற்றை விளக்கும்படியான சிறு கதைகளை யெடுத்துப் படிக்கும்படி செய்யவேண்டும். மேலும், தீனி தின்று தண்ணீர் குடித்து உயிர்வாழும் ஜீவன்களெல்லாம் தம்முடம்பிலுண்டாகும் உபத்திரவத்தைப் பொறுக்கமாட்டாமல் வருத்தப்படுமென்பதையும், அப்படி அவை வருந்தும்படி அவற்றிற்குக் கொடுமை செய்வது கொடிய பாவமென்பதையும், அந்தப் பாவஞ் செய்யாதபடி விலகப் பல வழிகளுண்டென்பதையும், அவர்களுடைய மனத்தில் நன்றாய்ப் பதியச் செய்யவேண்டும். இப்படியே பல சிறுவர்கள் நாய், பூனை, தவளை, பறவை முதலிய எளிய ஜந்துக்களைப் பிடித்து இம்சிப்பதாகப் பலவாறு கேள்வியுற்றிருக்கிறோம். அப்படி அவைகளை இம்சிக்காமல் அவைகளிடத்தில் அன்பு பாராட்டவேண்டுமென்றும், அற்பப் பிராணிகளைப் பரிவுடன் பாதுகாப்பது பெருந்தன்மை யென்றும் அச்சிறுவர்களுக்குக் கற்பித்தால், இந்தக் கொடிய செய்கைகள் வெகுவாய்க் குறைந்துபோகுமென்பதில் சந்தேகமில்லை. ஆகையால், பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் இப்படிப்பட்ட ஜீவகாருணியத்தைத் தம் பிள்ளைகளுக்குப் போதிக்கும்படி வேண்டுகிறோம். மனிதர்களுக்கு உடம்பில் ஏதேனும் ஒரு காயம்பட்டால் எப்படி சுறுக்கென்று உறைக்கிறதோ, அப்படியே வாயில்லா ஜந்துக்களுக்கும் உறைத்து நோவுண்டாகும். மேலும், மனிதரைப்பார்க்கிலும் மிருகங்களுக்கு அப்படி உபத்திரவப்படுத்துவதினாலுண்டாகும் நோவு இன்னு மதிகமாம். ஏனென்றால், அந்த நோவைப் பொறுத்துக்கொள்ளும்படியான மனவுறுதி அவைகளுக் கில்லையன்றோ? ஆகையால் அவைகள் விஷயத்தில் அதிகமான அன்புபாராட்டி ஆதரிக்கவேண்டும்.

குதிரைகளுக்குச் செய்யும் கொடுமை.

இக்காலத்திலே ஜீவகாருணியமுள்ள கனவான்கள், வால் கத்தரிக்கப்பட்ட கூழைவால் குதிரைகளைக் கண்டு மிகவும் சங்கடப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பேதையான குதிரைகளை ஈக்கள் வந்து கடித்துத் துன்பப்படுத்தினால், அதைப் போக்கிக்கொள்ள அவற்றிற்கு வழியென்ன இருக்கிறது? அற்பமான ஜட்கா வண்டிக்காரர்கள்கூட வாலைக் கத்தரித்துவிடுவது ஒரு அழகென்று தம் வண்டிக்குதிரை வால்களைக் கத்தரித்துவிடுகிறார்கள். அதேகாரணமாய் அந்தக் குதிரைகள் தேகசவுக்கியம் தப்பி நோய்கொண்டு வருந்துகின்றன; இப்படி வாலிழந்த குதிரைகள் தெருத்தெருவாய் வண்டி யிழுத்துக்கொண்டு ஓடுவதுமல்லாமல், கொட்டாரங்களில் அவை படும் ஸங்கடத்தைப் பார்த்தால் இன்னும் பரிதாபமாயிருக்கும். குதிரை கட்டுமிடங்கள் மலங்கள் நிறைந்து ஈ கொசுகு முதலியவை மொய்த்துக்கொண்டிருக்கின்றன; தம்முடைய அழகான வாலை யிழந்துபோன குதிரைகள், ஐயோ பாவம்! அந்த ஈக்கள் வந்து கடித்தால் என்ன செய்யமாட்டும்!

நமது அருமையான குதிரைகளை இப்படி வாலைக் கத்தரித்து வருத்தப்படுத்துவதுமல்லாமல், அநேகர் அவைகளுக்குச் சூடுபோட்டும் உடம்பைப் புண்படுத்துகிறார்கள். அதனால் அவற்றின் உடம்பில் அதிக நுட்பமான விடங்கள் மேல்மயிரொழிந்து புண்பட்டு வெயிற்காலத்தில் ஈ கொசுகு முதலியவை வந்து கடிக்கவும், குளிர்காலத்தில் குளிரினால் துன்பப்படவும் இடமுண்டாகிறது. குதிரைகளின் உடம்பில் முன்பக்கத்தில் மொய்க்கிற ஈக்களைக் குதிரை தம் உடம்பை வளைத்து முன்காலா லோட்டிக்கொள்ளும். பின்னங்காலுக்கு அப்படிப்பட்ட திறமையில்லாமையால், பின்புறத்தில் ஈ மொய்த்தால், அவற்றை யோட்டிக்கொள்ள வழியில்லாமல் மொட்டைவால் குதிரைகள் என்ன துன்பப்படுமோ? சிலசமயத்தில் ஈ மொய்ப்பதைப் பொறுக்கமாட்டாமல் அவை மூர்க்கங்கொண்டு அதனால் கொடிய அபாயமும் விளைவதுண்டு. ஆகையால் கடவுள் கொடுத்திருக்கும் உறுப்புக்களெல்லாம் மிகவும் உபயோகமானவை யென்று தெரிந்து, குதிரைகளுக்கு முக்கியமாய் ஈ ஓட்டிக் கொள்ளவும் அலங்காரமாகவும் அளிக்கப்பட்டிருக்கும் அற்புதமான வாலை யழிக்காமல் பாதுகாக்கும்படி வேண்டுகிறோம்.

குதிரைகளைத் துன்பப்படுத்துகிறவர்களுக்குத் தண்டனை.—குதிரைகள்விஷயத்தில் முரட்டுத்தனமான கொடுமை செய்கிறவர்களுக்கு ஒருவிதமான தண்டனையும் விதிக்காமல் இந்த ராஜாங்கத்தில் சட்டம் இத்தன்மையான கொடுமைகளுக்கு இடம் கொடுத்திருப்பது பெரிய துர்ப்பாக்கியம். நன்றாய்ப் படித்து நாகரிகத் தேர்ச்சிபெற்ற பெரிய மனிதர்கள், தம்மிடத்தில் அதிகமான விசுவாஸத்துடன் உழைக்கின்ற வாயில்லா ஜீவன்களை இப்படித் துன்புறுத்துவது தமக்கு ஒரு பெருமை யென்று நினைத்திருக்கிறார்களே, அதுவே ஒரு பெரிய ஆச்சரியம். இப்படி பெரிய ஜந்துக்களை யிம்சிப்பவர்களுக்கு மற்றொரு தண்டனையும் விதிக்கவேண்டுவதில்லை; அவனுடம்பு நிரம்ப வெல்லத்தைத் தடவி அவனது இரண்டுகைகளையும் பின்னால் சேர்த்து உறுதியாய்க் கட்டிவிட்டு, ஈயு

மெறும்பும் மொய்த்துக்கொண்டிருக்கும் வெல்லக் கிடங்கில் தள்ளிவிடுவதே அவனுக்குப் போதுமான தண்டனையாம்.

நமக்கு உபயோகமான நல்ல் ஜந்துக்களைப் போஷித்தல்.

வால் அறுக்கப்பட்ட குதிரைகள் சிலநாள்வரையில் வாலைத் தாழ்த்தக்கூடாமல் வாலைத் தூக்கினபடியே வைத்துக்கொண்டிருக்கவேண்டியிருக்கிறது. அதனால் அவற்றிற்கு உண்டாகும் உபத்திரவம் இவ்வளவென்று சொல்லிமுடியாது. ஆகையால், சின்னபின்னமாக்கப்பட்ட அந்தப் பரிமாவின்மேல் ஏறிச் சவாரி செய்பவன் அதனைத் தனக்குப் பெருமையாக நினைத்துக்கொண்டாலும், அந்தக் குதிரைக்கு அதுவே அழகாக எண்ணிக்கொண்டாலும், இவை யாவும் அந்த எளிய ஜந்துவுக்குக் கொடுமை செய்து தேடிக்கொண்ட உல்லாஸமேயன்றி வேறல்லவென்று யாவரும் உறுதியாய் எண்ணவேண்டும்.

கோடையிலும் மழையிலும் மேலே வெயிலும் குளிரும் தாக்காதபடி குதிரைக்கு மேலே போர்த்து வைக்கவேண்டும். நம்முடைய குதிரைகள் வயது முதிர்ந்து உழைக்க முடியாமல் வலிகுறைந்துபோனால், அப்பொழுது நாம் அவைகளிடத்தில் இரக்கமுள்ளவர்களாகி அவற்றை அதிக பக்ஷமாய்ப் பரிபாலிக்கவேண்டும். அவை பல யஜமானர்களிடத்திலும் நன்றி பாராட்டி உள்ள காலமெல்லாம் உழைத்துவந்தனவல்லவா? அதற்குப் பிரதியாகத் தள்ளாத வயதில் அவற்றை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டுமன்றோ? தள்ளாத குதிரைகளுக்கு ஒரு பங்கு விசுவாஸமென்றால், வாலிழந்த குதிரைகளுக்கு இருமடங்கான விசுவாஸம் வைக்கவேண்டும்.

பக்கத்தில் நிழலான மறைவிடம் இருக்கையில், குதிரையை வெயிலில் நிற்கவைக்கலாகாது; சூரியனுக்கு நேராகக் குதிரையை நிற்கவைக்காமல், அதின் கண்ணில் சூரியனொளி படாதபடிப் பின்புறமாகத் திருப்பி நிற்கவைக்கவேண்டும். குதிரைகளை வண்டியில் கட்டவேண்டியதற்காக அந்த வண்டியண்டை கொண்டுபோய் வெகுநேரம் நிற்கவைத்துக்கொண்டிருக்கலாகாது. குதிரைகளை வண்டியில் கட்டியோட்டினாலும், கொட்டிலில் கட்டிவைத்தாலும், நீங்கள் அதற்குச் செய்யவேண்டுவது என்னவென்றால், நீங்களே குதிரையாயிருந்தால் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புவீர்களோ, அதைச் செய்யுங்கள். வண்டிமாடுமுதலியவைகளுக்கு மிப்படியே.

தன் குதிரைக்குத் தீனி போடாமலும் தண்ணீர் காட்டாமலு மிருக்கிற குதிரைக்காரன் தனக்குச் சோறு தண்ணீர் அகப்படாமல் தவிப்பானென்பது நிச்சயம்.

வைத்தியசாஸ்திர பரிசோதனை.

'தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.'

ஜீவஹிம்ஸை கூடாதென்று அதை விலக்கும் பொருட்டு ஜீவகாருணியமுள்ள பிரபுக்கள் பலர் ஏற்பட்டு ஜீவஹிம்சை நிவாரண சங்கங்களை யெங்கும் ஸ்தாபித்துவருகிற இக்காலத்திலும் முற்காலத்திற்போலவே வைத்தியசாலைகளிலும், வைத்திய வித்தியாசாலைகளிலும் வைத்திய சாஸ்திர பரிசோதனையென்று பெயர்வைத்து வாயில்லா ஜந்துக்களை அங்கச்சேதஞ்செய்து பரீக்ஷை பார்க்கிற கொடிய செய்கை கையாளப்பட்டுவருவதும், அதற்குத் துரைத்தனச்சட்டம் இடங்கொடுத்திருப்பதும் மிகுந்த ஆச்சரியமே. இப்படி ஜீவன்களை இம்சிப்பதனாலுண்டாகும் நன்மை யென்னவென்றால், ஜீவஜந்துக்களின் உடம்பை யறுத்துப்பார்த்தால் தேகதத்துவங்களெல்லாம் நன்றாய்த் தெரியுமென்றும், அப்படித் தெரிந்துகொண்டால், மனிதர்களுக்கு தேகத்தில் உண்டாகும் அநேகவிதமான உபத்திரவங்களை நிவிர்த்திசெய்யவும், அதனால் மனிதர்கள் வெகுநாள் ஜீவித்திருக்க வகைதேடவும் வேண்டிய உபாயங்களைத் தெரிந்துகொள்ளலாமென்றும் சொல்லுகிறார்கள். அநேகம் மனிதர்களுடைய உயிரைக் காப்பாற்றுவதன்பொருட்டு எளிய ஜந்துக்களை அறுத்து இம்சிப்பது நியாயமேயென்றும் நினைக்கிறார்கள்.

அவர்கள் நினைக்கின்றபடி ஜீவஜந்துக்களை அங்கச்சேதம் செய்து பரிசோதிப்பதனால் வைத்தியசாஸ்திரத்தில் மேன்மேலும் பற்பல புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்கவும், மனிதர்களுடைய உபத்திரவங்களை அனுகூலப்படுத்தவும் வழியுண்டாவதாயிருந்தாலும், இந்த நன்மைகளுக்காகவே ஜீவப்பிராணிகளைக் கொடுமையாக இம்சித்துத் துன்பப்படுத்தலாகாது; அதற்குச் சட்டம் ஒருபோதும் இடங்கொடுக்கவுங்கூடாது.

வைத்தியசாஸ்திர பண்டிதர்களுடைய அபிப்பிராயம்.—வாயில்லாஜந்துக்களின் உடலைச் சேதித்துப்பார்ப்பதனால் ஏதோ நன்மை உண்டாகுமென்று உத்தேசிக்கிறார்களே, அந்த நன்மைகள் உண்டாகுமென்பது நிச்சயந்தானா? வைத்திய சாஸ்திரிகள் பலர் அதற்கு அனுகூலமாகவே பேசினாலும், அது அடியோடு கூடாதென்று கண்டித்துப் பேசுகின்றவர்களும் பலரிருக்கின்றனர்.

மேஸ்தர் லாஸன் டேயிட் என்பவருடைய கொள்கை.—ஜீவஜந்துக்களை அங்கச்சேதம் செய்து பரிசோதனை பார்ப்பது சிறிதும் உபயோகமில்லாததும், தப்பான கொள்கையை உண்டாக்கு

வதுமாம். உண்மையான சாஸ்திர விஷயங்களின் அபிவிருத்தியைப்பற்றி யோசித்தால், இந்த அங்கச்சேதம் செய்வதை அடியோடு நிறுத்திவிடவேண்டும். அப்படி நிறுத்திவிட்டால் அப்பொழுது வைத்திய நூலாராய்ச்சி செய்பவர்கள் இப்படிப்பட்ட அபாயமில்லாத வேறு நல்ல வழிகளில் தங்கள் முயற்சியையும் புத்தியையும் ஸாமர்த்தியத்தையும் செலுத்த இடமுண்டாகுமென்று, போன நூற்றாண்டில் மிகப் பிரசித்திபெற்ற சஸ்திர வைத்தியராயிருந்த ஐரோப்பிய வைத்திய சாஸ்திரியான டேயிட் என்பவர் சொல்லுகிறார். அன்றியும் அவர், தாம இவ்விஷயத்தை முப்பது வருஷத்திய அனுபவத்தினால் அறிந்து சொல்வதாகவும், இந்த அங்கச்சேத சோதனை தற்காலத்தில் நிறுத்தப்படாவிட்டாலும், இக்கொடிய செய்கை இயற்றுவது மிகவும் தப்பிதமான காரியமென்று துணிந்து அதை யொழிக்க முயன்றவன் என்கிற பிரசித்தியாவது தனக்கு வந்தால் போதுமென்றும் உறுதியாகச் சொல்லுகிறார்.

உவில்ஸன் என்னும்வைத்தியசாஸ்திரியினது கொள்கை. — உவில்ஸன் என்கிற வைத்திய சாஸ்திரி சிகிச்சை விஷயமாகத் தாம் செய்த ஒரு உபந்நியாஸத்தில் சொல்வதாவது: அங்கச்சேதம் செய்து பரிசோதனை பண்ணுவது உபயோகமான காரியமென்றே இதுவரையில் நானும் எண்ணியிருந்தேன். சாஸ்திர பரிசோதனையென்று பெயர் வைத்துப் பகுத்தறிவில்லாமல் பேதைப் பிராணிகளை ஊறுபடுத்துவதாலும், சித்திரவதை செய்வதாலும், ஜீவஹிம்சை யொன்று உண்டாகிறதே தவிர, இதுவரையில் ஒரு மனிதனுடைய பிராணனும் அதனால் காப்பாற்றப்படவில்லையென்றும், ஒருவருடைய உபத்திரவமும் அதனால் சாந்தமாக்கப்படவில்லையென்றும் அனுபவத்தினால் இப்பொழுது நன்றாய்க் கண்டறிந்தேன் என்கிறார்.

டாக்டர் லான்ஸெட் சொல்வதாவது:—செய்யும் காரியங்களால் விளையும் பயனை அளவிட்டு அறியும்காலம் வந்திருக்கிறது. ஆகையால் எதாவது நன்மை யுண்டாகுமென்கிற உத்தேசத்தினால் செய்யும் சாஸ்திர பரிசோதனையென்று பெயரிட்டுப் பகுத்தறிவில்லாமல் பேதைப் பிராணிகளைச் சித்திரவதை செய்வதை ஜனங்கள் இனிமேலும் உபேக்ஷையாகப் பார்த்துக்கொண்டு மௌனமாயிருப்பார்களென்று நான் நினைக்கவில்லை. ஜீவஹிம்ஸை செய்து சோதனைபார்ப்பது முற்றும் அவசியமில்லாத செய்கை யென்பதை உறுதிப்படுத்த எத்தனை சாக்ஷிகள் வேண்டுமானாலும் நான் எடுத்துக் காட்டுகிறேன்.

ஜீவஹிம்ஸை செய்யாமலே மனிதர் சுகம் பெறு முபாயங்கள்.—நாடு நகரங்களில் விசேஷமான பரிசுத்தியும், பரிசுத்தமான தண்ணீரும், ஆரோக்கியமான உணவும், நல்ல காற்று உலாவும்படியான சிறந்த வீடும், பெரிய விசாலமான படுக்கையறை முதலியவைகளும், குடிநெருக்கமில்லாமையும், மிதமான உழைப்பும், பரிசுத்தமான காற்றை யுட்கொள்வதற்கு வேண்டிய காலங்களை விசேஷமாகத் தேடுவதும், சுகபோகங்களில் மிதமான ஆசையும் ஆகிய இவைகளே மனிதர்கள் நெடுங்காலம் வாழ்ந்திருப்பதற்கும், உடம்பில் உபத்திரவங்கள் இல்லாமல் சுகமாயிருப்பதற்கும் சிறந்த சாதனங்களென்பதை நாமெடுத்துரைக்கவும் வேண்டுமோ?

ஜீவ காருண்யமுள்ள மற்றுஞ் சிலருடைய கொள்கை.—ஜீவஜந்துக்களை அறுத்துச் சோதிக்க வேண்டுமென்று கூறுகிறவர்களுடைய கொள்கைப்படியே, அதனால் மனிதர்களுக்கு நன்மையுண்டாகுமென்று வைத்துக்கொண்டாலுங்கூட, எளிய ஜந்துக்களை இப்படிச் சித்திரவதை செய்வது அதருமமும் அக்கிரமமுமான செய்கையென்று அநேகர் கண்டிக்கிறார்கள். ஜீவஹிம்ஸை செய்வதனால் நன்மை விளையுமோ விளையாதோ, அதை அந்த வைத்திய சாஸ்திரிகளே தீர்மானித்துச் சொல்லவேண்டும். வாயில்லா ஜந்துக்களை ஹிம்ஸிப்பது அநீதியான காரியமென்பதற்கு சாக்ஷியொருவரும் சொல்லவேண்டுவதில்லையே; மனிதர்களில் ஆண் பெண் அனைவருக்கும் இது தெரிந்த விஷயந்தானே, ஒவ்வொருவரும் தம்மனத்தைத் தொட்டுப் பார்த்துக்கொண்டால், அதுதானே உறுதியாகச் சொல்லும். எளிய ஜந்துக்களை இம்சிப்பதனால் எப்படிப்பட்ட நன்மை விளைவதாயிருந்தாலும், அந்த ஜந்துக்கள் வெகுநேரம் குற்றுயிராய்த் துடிக்கும்படி பார்த்துக்கொண்டு அவற்றின் அங்கங்களைச் சேதித்துச் சோதனைசெய்வது மிகவும் இழிவானகாரியம்; அதருமமும் அக்கிரமமுமான கொடிய பாவமாம்! என்கிறார்கள்.

ஸந்தேகத்தினால் ஒரு காரியம் செய்யலாகாதென்பது.—ஜீவமிருகாங்கச் சேதனஞ்செய்து பரிசோதனை பண்ணுவதால் நன்மை விளையுமோ விளையாதோ, அது அவர்களுக்கே ஸந்தேஹமன்றோ? இப்படி ஒரு ஸந்தேஹமான காரியத்திற்காக ஜீவஹிம்ஸை செய்யலாமா? குற்றவாளி யொருவன் தன் வாழ்நாளில் பாதிகாலம் சிறைச்சாலையில் வஸிக்கும்படியான குற்றஞ்செய்த வளவிலும், அவன் அந்தக் குற்றஞ்செய்தது ஸந்தேஹமென்று மத்தியஸ்தர்களுக்குத் தோற்றினால், அவனுக்குத் தண்டனை விதிக்காமல் விடுதலை செய்கிறார்களன்றோ? அந்த நியாயமும் வாயில்லா ஜந்துக்கள் விஷயத்தில் இல்லாமல்போயிற்றோ? அவைகளைக் கொலை செய்வதற்குச் சரியான காரணமொன்றும் காணப்படவில்லையே; தமக்குள்ள நியாயத்தை யெடுத்துப் பேச அவைகளுக்கு வாயுமில்லையே! ஆதலால் அவைகளை விடுவிக்கலாமன்றோ?

வாயில்லா ஜந்துக்களுக்குள்ள உரிமைகள்.--மானிடராகிய நம்மைப்போலவே கடவுளால் படைக்கப்பட்டு ஐம்புல உணர்ச்சியுமுடையவை

களா யிருப்பதால், வாயில்லா ஜந்துக்களும் நம்மைப்போலவே சுகதுக்கங்களை யனுபவிக்கு மியல்புடையனவாம். மனிதர்களுக்குள்ள உரிமைகள் யாவும் அவற்றிற்கு முண்டு. எல்லா உரிமைகளும் மனிதர்களுக்கேயன்றி மிருகங்களுக்கு ஒன்றுமில்லையென்று சிலர் சொல்லுவார்கள். மனிதர்களை இம்சித்தல் பாவமேயொழிய மற்றப் பிராணிகளை இம்சிப்பது பாவமன்றென வேறு சிலர் சொல்லுவார்கள்; ஜந்துக்களை இம்சிப்பதனால் மனிதர்களுக்கு ஏதாவதொரு நன்மை யுண்டாவதாயிருந்தால் அந்த இம்ஸை நியாயமானதுதான் என்றும் சிலர் சொல்லுவார்கள். இப்படிப்பட்ட கொடிய நெஞ்சுடையவர்களுக்கு எல்லாம் நாம் ஒரே ஸமாதானஞ் சொல்வோம். இப்பொழுது நீங்கள் இப்படி ஏதோ ஒரு காரணம்பற்றி வாயில்லா ஜந்துக்களை இம்சிக்கத் தொடங்கினால் நாளளவிலே உங்களுடைய உயிருக்கும் இப்படிப்பட்ட உபத்திரவம் வந்து சம்பவிக்குமென்று அறியவேண்டுமென்பதேயாம். ஒரு கொடுமை செய்யத் துணிந்தால் அது மற்றொரு கொடுமைசெய்யத் தூண்டுகிறது. முதலில் வாயில்லா ஜந்துக்களை இம்சை பண்ணி அதனால் கருதிய காரியம் கைகூடாவிட்டால், உடனே மானிடருடலைச் சேதித்துப் பார்க்க ஆவலுண்டாகிறது. 'எளியாரை வலியாரடித்தால், வலியாரைத் தெய்வமடிக்கும்.'

மனிதருடலை யறுத்ததற்கு ஒரு சிறு திருஷ்டாந்தம்.—ஒரு ஏழைப் பெண் மார்பில் கட்டி புறப்பட்டு அதைச் சிகிச்சை செய்து சொஸ்தப்படுத்திக்கொள்வதற்காக வைத்தியசாலைக்குப் போனாள். அங்கிருந்த வைத்தியர் அந்தப் பெண்ணுக்கு மயக்கம் கொடுத்து அந்தக் கட்டியை யறுத்து மருந்துபோட்டுப் பிறகு அந்த மயக்கம் தெளியாதிருக்கையிலேயே அவர் பரிசோதனைக்காகத் தான் அறுத்த கட்டியின் சீழை யெடுத்து மற்றொரு புறத்து மார்பில் கீறி வைத்தார். தற்காலம் அந்தப் புண் ஆறிப்போயிற்றென்றாலும், பிறகு அவள் அந்தப் பாரிசத்திலும் மற்றொரு பெரிய கட்டி புறப்பட்டு அதிகமான கஷ்டம் அனுபவித்தாள். இப்படிப்பட்ட திருஷ்டாந்தங்கள் அநேகமுண்டு. அவற்றையெல்லாம் இங்கெழுத இடமில்லை.

நாளெண்ணும் பூனை.

ஒரு பெரிய உத்தியோகஸ்தன் தன் உத்தியோக சாலையில் ஒரு பூனையை வளர்த்து வைத்துக்கொண்டிருந்தான். அந்தப் பூனை மிகவும் நல்ல பூனை. அதனிடத்தில் அந்த யஜமானனுக்கு அன்பும் ஆசையு மதிகம். ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளானதுபற்றி அன்றையதினம் உத்தியோகத்திற்குப் போகவேண்டிய அவசியமில்லை யாகையால், அன்று ஒருநாள் தன் பூனையைவிட்டுப் பிரிந்து தனியே யிருக்கப் பிரியமில்லாமல் அவன் சனிக்கிழமைதோறும் சாயங்காலம் வீட்டுக்குப் போகும்பொழுது அந்தப் பூனையையும் கூடவே எடுத்துக்கொண்டுபோய் வழக்கப்படுத்தினான்.

அந்த உத்தியோகசாலையில் புதன்கிழமையும் சனிக்கிழமையும் தபால் முதலியவை வெளிக்குக் கட்டியனுப்பவேண்டிய காரியம் விசேஷமாகையால் வேலை கொஞ்சம் அதிகமாயிருக்கும். மற்றப்படி எல்லாக் கிழமைகளும் ஒரேமாதிரிதான்.

அந்த யஜமானன் சனிக்கிழமைதோறும் தான் வீட்டுச்குப் போகும்பொழுது தனது இருசக்கர வண்டியின் அடியிலே ஒரு கூடையைக் கட்டி அதில் தன் பூனையைக் கொண்டுபோவது வழக்கம். சனிக்கிழமை தவிர மற்றக் கிழமைகளில் அந்த வண்டியில் கூடை காணப்படாது. சனிக்கிழமைதோறும் யஜமானன் வீட்டுச்குப் பிரயாணமாவதற்கு முன்னமே பூனை தானே போய் அந்தக் கூடையில் புகுந்துகொள்ளும்.

இப்படியிருக்க, ஒரு சனிக்கிழமை அந்த யஜமானன் வேலை யவசரத்தில் பூனையை மறந்து வீட்டுக்குப் புறப்பட்டுப் போய்விட்டான். சிறிதுதூரஞ் சென்றவுடனே அவன் பூனையை நினைத்துக்கொண்டு திரும்பினான் திரும்பிவருகையில், பூனை பாதிவழியிலே அதிவேகமாய் அவனிடம் ஓடிவந்துகொண்டிருந்தது. அதைக்கண்டு அவன் ஸந்தோஷப்பட்டு அப்பூனையை யெடுத்து மடியில் வைத்துக்கொண்டு அப்படியே வீடுபோய்ச் சேர்ந்தான்.

'இந்தப் பூனைக்கு இன்றையதினம் சனிக்கிழமை யென்பது எப்படித் தெரியும்? அல்லது இத்தனை நாளைக்கு ஒரு முறை யஜமானனுடன் வீட்டுக்குப் போகிறதென்று நாளெண்ணத் தெரியுமா? இல்லாவிட்டால், அது எப்படி சனிக்கிழமைதோறும் யஜமானனது வண்டிக் கூடையில் வந்து புகுந்துகொள்ளுகிறது' என்று, இந்த விருத்தாந்தத்தைக் கேட்டவர்களெல்லாரும் இன்னும் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அது அப்படிச் செய்வதற்கு அதன் நுட்ப புத்திதவிர மற்றொரு காரணமும் கண்டு பிடித்துச் சொல்ல ஸாத்தியப்படவில்லையே.

உயிரைக்காப்பாற்றிய உத்தமமான நாய்கள்.

1. நெருப்புப்பற்றிய வீட்டில் தீக்கு இரையாகாமல் தனது அருமை நாய் தன் குடும்பத்தைக் காப்பாற்றியதென்று ஒரு யஜமானன் அதை மிகவும் கொண்டாடுகிறான். அது எப்படியென்றால், ஒருநாள் இராத்திரி அவனது வீட்டில் அந்த நாய் மேல்மாடிப்படியின் கீழேபடுத்துத் தூங்கிக்கொண்டிருந்தது. அர்த்த ராத்திரியில் எப்படியோ அவ் வீட்டில் தீப்பற்றிக்கொண்டது. அப்பொழுது

உண்டான புகையினால் அந்த நாய் விழித்துக்கொண்டது. வீட்டிலுள்ளவர்களெல்லாரும் தங்களுக்கு வந்திருக்கிற ஆபத்து இப்படிப்பட்டதென்று தெரியாமலே இன்னும் பெருந்தூக்கமாயிருந்தார்கள். நாய் அதைக் கண்டு குரைக்க ஆரம்பித்துக் குரைத்துக்கொண்டே மேல்மாடிக்குப் போய், அங்கே தூங்கிக்கொண்டிருந்த யஜமானன் யஜமானிகளை மேல்துணியைப் பிடித்திழுத்து எழுப்பிவிட்டது. உடனே யஜமானன் கண்விழித்துக்கொண்டு வீட்டைச் சூழ்ந்திருக்கும் புகையைப் பார்த்து அலறிக்கொண்டு எழுந்து, அங்குள்ளவர்களெல்லாரையும் யெழுப்பி வெளியே வீதிக்கு அழைத்துக்கொண்டுபோகலானான். இதற்குள் அந்த நாய் அங்கே படுத்திருந்த ஆறுவயதான ஒரு பெண் குழந்தையைத் தன் வாயினால் கவ்வி மெல்ல இழுத்துக்கொண்டு அந்த மேல்மாடியிலிருந்து கீழே கொண்டுவந்து சேர்த்தது. இந்த நாயொன்று இல்லாவிட்டால், அந்தக்குடும்பத்தார் எல்லாரும் அன்றையதினம் இறந்துபோனவர்களே யன்றோ? இவ்விதமான நுட்பபுத்தி யுடையவையாய் நமக்கு உபகாரஞ்செய்யும் அருமைப் பிராணிகளிடத்தில் நாம் நன்றியற்றவர்களாயிருக்கலாமோ?

2. நாயின் நுட்பபுத்திக்கு மற்றொரு திருஷ்டாந்தம் கேளுங்கள்: கப்பல் செப்பனிடுமிடத்தில் வேலைசெய்துகொண்டிருந்த ஒருவன் ஒரு சிறந்த நாயினாலேயே பிழைப்பிக்கப்பட்டான். எப்படியென்றால், அங்கிருந்த பாலத்தின்மேல் அந்த நாய் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தது. தண்ணீரில் எதை யெறிந்தாலும் உடனே போய் அதை யெடுத்துவருவது அதற்கு முக்கியமான பழக்கமாயிருந்தது. அந்தக் கடல்துறையில் ஒரு கயிற்றின் மீது நடந்துபோன வேலைக்காரன் தவறிக் கடலில் வீழ்ந்துவிட்டான். அவனுக்கு நீந்தத் தெரியாது. அவன் கடலில் விழுந்த ஓசை கேட்டவுடனே நாய் விழித்துக்கொண்டு எழுந்து பார்த்து தக்ஷணமே தண்ணீரில் குதித்தது. அதற்குள் அவன் கண்ணுக்குத் தெரியாமல் மூழ்கிப்போனானாயினும், அங்கே தண்ணீரில் தோன்றிய அடையாளத்தைப் பார்த்துக்கொண்டு அந்தநாய் தானும் அவ்விடத்தே முழுகி அவனைத் துணியைப் பிடித்திழுத்து மேலே கொண்டுவந்து சேர்த்தது. இந்த நாயின் உதவியில்லாவிட்டால் அவன் உயிர்போனவனே யன்றோ?

வாயில்லா ஜந்துக்களிடத்தில் பொறுமை வேண்டும்.

ஒரு சிறிய நாய் ஏதோ ஒரு காரணத்தினால் திகில் அடைந்து பைத்தியம் பிடித்ததுபோலப் பிரமைகொண்டு கடுங்கோடையில் ஒருநாள் ஒரு கடையின் மூலையிலே போய்ப் பதுங்கிக்கொண்டது. அதைக் கண்டு பெரிய ஆட்கள் நான்கு பேர் அதனோடு யுத்தஞ்செய்பவர்போல அதை யெதிர்க்கலானார்கள்; ஏனென்றால் அவர்களும் அதைக் கண்டு வெறிகொண்ட நாய் தங்களைக் கடிக்குமென்று மிகவும் பயமடைந்தார்கள். அவர்களில் ஒருவன் ஒரு பெரிய தடியை எடுத்துக்கொண்டு அதனைப் புடைக்கலானான்; பெருந்தடியால் புடைத்தால் அதன் பைத்தியம் போய்விடுமென்று அவன் எண்ணினான்போலும். மற்றொருவன் அந்தப் பேதை நாயின்மேல் தண்ணீரை யெடுத்துக் கொட்டினான். மற்றொருவன், வெறிகொண்ட நாயை விடாமல் அடியுங்களென்று கூவினான்.

இவர்கள் இப்படி அந்த வாயில்லாத ஜந்துவை இம்சித்துக்கொண்டிருப்பது கண்டு அவ்விடம் வந்த மற்றொருவன் அவர்களைத் தடுத்து, அவசரப்படாதேயுங்கள், சற்றுப் பொறுங்கள், இதை நான் அப்புறமோட்டிவிடுகிறேன் என்றான். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், அந்த நாய் கொஞ்சம் தைரியமடைந்து அவர்களுடைய கால்களின் சந்தில் நுழைந்து அப்பால் ஓடிப்போய் விட்டது.

அது வீதியில் திரிகிற கட்டுவாரில்லாததிக்கற்ற நாயல்ல, ஒரு பெருமாட்டி வளர்க்கிற நாய். அந்தக்கொடியவர்களிடத்தினின்று விடுபட்டவுடனே அது, உடம்பு நடுங்க நடுங்க, தன்யஜமானி வீடு போய்ச் சேர்ந்தது. இந்தப் புதுமனிதன் அதன் பின்னேபோய் நடந்த விருத்தாந்தத்தை அவ்வீட்டு யஜமானியுடன் சொன்னான். அதைக் கேட்டவுடனே அவள் அந்த நாயண்டை வந்து அதன் சிறிய முகத்தைத் தன் கையால் கட்டிக்கொண்டு அதனுடன் என்னென்னவோ பேசி அதைத் தட்டிக்கொடுத்துச் சமாதானப்படுத்தினாள். அதனால் அந்த நாய் வெறி தெளிந்து சாந்தமாகிவிட்டது.

தேகத்தில் ஒரு வியாதியுமில்லாமல் அச்சத்தினாலாயினும், தேகத்திலுள்ள வலியினாலாயினும் நாய்க்கு வெறியுண்டாயிற்றென்று தெரிந்தால், அப்படிப்பட்ட காலத்தில் நாம் நம்முடைய யுக்தி புத்திகளையே உபயோகப்படுத்தி அந்தத் துன்பத்தைப் போக்கடிக்கவேண்டும். நாய்க்கு உண்டான அச்சத்தையும் நோவையும் நிவிர்த்திபண்ணிவிட்டால், வெறிதானே சாந்தமாகிவிடும். இந்த நுட்பம் அறிந்தவர்கள் இப்படி வெறிகொண்ட நாய்களை வீணே கொன்றுவிடாமல், தனிப்புறமான ஓரிடத்தில் கொண்டுபோய்க் கட்டிவிடுகிறார்கள். சிலநாள் அப்படி தனியே கட்டிவைத்தால், பிறகு தானே வெறி தெளிந்து அது சாந்தமாகிவிடுகிறது. மனிதன் சிறந்த புத்தியும் தைரியமுமுடையவனானால், அவன் இப்படிப்பட்ட மூர்க்கங்கொண்ட மிருகத்தின் விஷயத்தில் தனக்குள்ள அன்பை வெளியிட்டு நல்வார்த்தை யாகவேண்டுவதே இதற்குச் சிறந்த ஔஷதமாகும். வீட்டில் குழந்தைகள்

வெறிகொண்டால் தாய் சீராட்டிச் சாந்தப்படுத்துகிறாளன்றோ? அம்மாதிரியாகச் சீராட்டினால் எப்படிப்பட்ட மூர்க்ககுணமும் மாறிப்போம். மிருகங்களை நாம் பரிந்து போற்றினால், அவை நம்முடைய விசுவாஸத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு, தமக்குத் தோழர்கள் அகப்பட்டார்களென்று ஆநந்தமடைகின்றன. இதுவே சீக்கிரமாகமுரட்டுக்குணத்தைச் சாந்தப்படுத்தும் உபாயமாம்.

சில தருணங்களில் வேறுவிதமான வகைகளும் தேடவேண்டியிருக்கும். அப்படி வெறிகொண்ட நாய்களைக் குளிர்ச்சியான இருண்டவிடத்தில் வைத்து அதன் முகத்தில் குளிர்ந்த தண்ணீரைத் தெளித்தால், அநேகமாய் இவ்விதமான வெறி நீங்கிப்போம். இதுவே நாய்களைச் சாந்தப்படுத்தச் சிறந்த கைகண்ட மருந்தாம்.

அறியாமையே கொடுமை செய்தற்குக் காரணம்.

சுத்தமான அறியாமையாலேயே அநேகமான தீமைகள் செய்யப்படுகின்றன. சிறுபிள்ளைகள் பல பூச்சிகளைப் பிடித்து நசுக்கிக் கொல்லுகிறார்களே. அவர்கள் அப்படிச் செய்வதற்கு என்ன காரணம்? தாம் செய்யும் காரியத்தினால் இன்னவிதமான துன்பம் உண்டாகிறதென்பது அவர்களுக்குத் தெரியாமையேயல்லவா? அன்றியும் தாம் அப்படிப்பட்ட துன்பம் செய்வதினும், லோகோபகாரமான நல்ல காரியங்கள் அநேகம் செய்யும்படியான திறமை தங்களிடத்திலிருக்கிறதென்றும் அவர்களுக்குத் தெரியாது ஜீவஹிம்ஸை செய்வதனால் தமக்குக் கொடிய பாவமுண்டாகுமென்பதையுமறியார்கள். மேலும், தாம் எந்தப் பக்ஷி மிருகாதிகளைப் பிடித்து ஹிம்ஸிக்கிறார்களோ, அவற்றினுடைய வரலாறுகளைத் தாம் நன்றாகக் கற்றறிவது தமக்குப் பேராநந்தம் விளைவிக்குமென்பதும் அவர்களுக்குத் தெரியாது. இவ்விஷயங்களைப் பெற்றோரும் உபாத்தியாயர்களும் சிறுவர்களுக்கு நன்றாகக் கற்பிப்பார்களானால், பிறகு அவர்கள் கொடுமை செய்யக் கருத்துக் கொள்ளுவார்களோ? ஒருபோதும் கொள்ளார்கள்.

மிருகங்களுக்கு மனிதர் பேச்சை அறியும் திறமையுண்டா?

மனிதர்களுடைய பேச்சை யறிந்துகொள்ளும்படியான திறமை மிருகங்களுக்கு உண்டு; ஆனால் அது எவ்வளவு இருப்பதாக ஜனங்கள் நினைத்திருக்கிறார்களோ, அதை விட அதிகமான திறமை அவற்றினிடம் அமைந்திருக்கின்றது: இந்துதேசத்தவர்கள் தங்களுடைய யானைகளுடனே பேசுகிறார்கள், யானை அவர்களுடைய பேச்சை அறிந்துகொள்வது யாவருக்கும் அதிகமான ஆச்சரியத்தை உண்டாக்குகின்றதல்லவா? அரேபியர்கள் சில குறிப்பான சொற்களைச் சொல்லித் தம் ஒட்டகங்களுடன் பேசி அவற்றைப் பரிபாலிக்கிறார்கள். ஆப்பிரிக்காதேசத்து வனாந்தரத்தில் தம் ஒட்டைகளோடு அரேபியர் பேசிக்கொண்டு விநோதமாகச் செல்வதைக் கண்டு அநேகர் ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள். அநேகம் சிறிய வாக்கியங்களுக்கு அர்த்தம் இன்னதென்று அந்த மிருகங்கள் நன்றாகத் தெரிந்துகொள்ளுகின்றன. “மிருகங்களை வைத்திருக்கும் விநோதக் காட்சி சாலை ஒன்றுக்கு நான் சில ஆண்டுகளுக்கு முன்னே போயிருந்தேன். அங்கே கட்கமிருகமொன்று படுத்திருந்தது; அதைப்பார்த்து நான் அங்கிலேய பாஷையில் சில வார்த்தைகள் சொன்னேன்; அது கண்ணைக் கூடத் திறந்து பார்க்கவில்லை. பிறகு யான் மற்றொரு பக்கமாகப் போய் அதைப்பார்த்து, நான் உன்னோடு பழகியவனன்றோ? ‘நீ என் அருகே வா’ என்று அரபிபாஷையில் பேசினேன். அதைக் கேட்டவுடனே அது தலையைத் தூக்கி எனக்கு நேராகத் திருப்பிப் பார்த்தது. நான் மறுபடியும் அதேவிதமாகக் கூவி யழைத்தேன். அது எழுந்து நான் இருந்த மூலைக்கு வந்து தன் முகத்தை அந்தக் கூட்டைச் சுற்றிலுமுள்ள இருப்புக் கம்பிகளில் தேய்த்துக்கொண்டு என்னையே பார்த்தது” என்று ஒருவர் சொல்லுகிறார்.

இப்படியே சிங்கங்களும் மனிதர்களுடைய பாஷையைத் தெரிந்துகொண்டு அவர்களிடத்தில் அன்பு பாராட்டுவதைப் பலர் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறார்கள்.

சிறுவர்க்காகும் புதிய படிப்பினை.

1. திக்கற்ற ஜந்துக்களுக்குத் தீங்குசெய்பவர் பெரியோராயினும் சிறியோராயினும், அவர்களை வீரமில்லாத பேதையென்றே நினைக்கவேண்டும்.

2. தைரிய சௌரியமுடையவர்கள் யாரென்றால், தம்மினும் துர்ப்பலமாயிருப்பவரை அன்புடன் பரிபாலிப்பவரேயாம்.

3. தமக்கு நேசர்களை வேண்டுவோர், தமக்குள்ள நேசிக்கும் குணத்தைக் காட்டவேண்டும்.

4. வீடுகளில் நமக்கு உதவியாயிருக்கும் ஜந்துக்களுக்கு நாம் விடாமல் செய்யவேண்டிய காரியமாவது, அவைகளுக்கு நல்ல உணவும் படுக்கையும் தப்பாமல் தேடிக்கொடுப்பதேயாம்.

கொடுமை செய்வதனால் விளையும் பயன்.

எளிய வாயில்லா ஜந்துக்களைக் கொடுமையாக நடத்துவதனா லுண்டாகும் துன்பம் அந்த மிருகங்களுக்கு அத்தனையாக அதிகமில்லை; அதைப்பார்க்கிலும் அக்கொடுமை செய்பவர்களுடைய மனத்திற்கு உண்டாகும் துன்பமே மிகவும் அதிகமாம். எளிய ஜந்துக்களை உதைக்கிறவன் தன் மனத்தை மிகவும் அதிகமாக உதைத்துக்கொள்ளுகிறான். பசியுடனே பரிதாபமாகப் பார்க்கிற எளிய ஜீவன்களுடைய துன்பத்தைப் போக்க வழிதேடாமல் இரக்கமில்லாத நெஞ்சுடனே அவற்றைப் பார்த்துக் கொண்டு போகிறவன் தன்னிடமுள்ள மனிதத் தன்மையை இழந்தவனாகிறான். அவனை மிருகத்திலும் கேடுகெட்ட மிருகமென்னலாம். சிறு பூச்சிகளையும் பறவைகளையும் பிடித்துத் துன்பப்படுத்தும் சிறுவர்கள் பிற்காலத்தில் ஒருபோதும் கௌரவப்பட்ட பெரிய மனிதர்களென மதிக்கப்படமாட்டார்கள்.

CORONATION SONG.

சக்கரவர்த்தி மகுடாபிஷேக மங்களவாழ்த்து.

1902-௵ ஆகஸ்ட்டு௴ 9௳.

மோகனம்.] [ஆதிதாளம்.

லல்லாலால லல்லலல்ல லாலலல்ல லா.
லாலலால லல்லலல்ல லல்லலல்ல லா.

எல்லாராஜ்ய முந்தழைக்க ஏற்றசெங்கோ லை
ஏந்தியாட்சி எட்வர்ட்டு ராஜனேற்ற னன்
நல்லோரோடு கூடிவாழ்த்த நாமுஞ்சேரு வோம்
நாட்டார்கொள்ளும் இன்பமுற்றும் நாடவாரி ரே.

நாட்டின்மீதும் தீவின்மேலும் நண்ணும்வீரர் தாம்
நன்கிராஜ பக்தியோடு நாடிவாழ்த்து வார்
தோட்டின்மீது வைரம்வைத்த தூயமகுட மேல்
சூடும்ஆட்சி நாமும்வாழ்த்தச் சூழ்ந்துவாரி ரே.

விக்டோரியா மகாராணி வேய்ந்தமகுட மும்
வீரராம்முன் வேந்தர்கையில் மேவுசெங்கோ லும்
தக்கோர்யாருங் கண்டுபுகழத் தாங்கிநின்ற ருள்
சக்கரவர்த்தி யாட்சிபோற்றச் சார்ந்துவாரி ரே.

நாற்றிசைக்க ணுள்ளதாய நாடுமுற்று மே
நமதுராஜன் எட்வர்ட்டின் நல்லஆட்சி யே
ஏற்றமாக நீடுவாழ்க என்றுபோற்று வார்
யாமுமெய்ப் பராபரத்தை யேத்தவாரி ரே.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1902.

A DESERVED TRIBUTE.

Eightieth Birth-Day Presentation. (See Page 29.)

MISS FRANCES POWER COBBE.

பிரான்ஸெஸ் பவர் காப் என்னும் பெருமாட்டிக்கு
எண்பதாம் வருஷப்பிறப்பில் தகுதியாகச் செய்த ஸம்மானம்.

A WORD TO TEACHERS.

It is the great desire of the Editor who conducts this Vernacular Periodical on behalf of the Madras S. P. C. A., to learn from public school teachers how far the information contained in its pages is appreciated by them and their pupils, and to give some assistance to teachers in advancing humane education with other lessons. If the teachers themselves who receive the Tit-Bits would send word as to what they are doing in this kind of work, it would be an encouragement to the Editor and a help for other teachers. The following extract bearing on the subject is taken from an excellent American Journal to interest all teachers among other readers of Tit-Bits :—

"In talking with a teacher of one of our Girls' Schools I found that she felt it was putting a pressure upon her that she could not bear to ask her to introduce humane teaching among the other lessons she was obliged to carry on, but she did not quite understand my purpose. As I look at the matter, a teacher can introduce humane education with her other lessons and do an immense amount of good if she has the interests of our four-footed friends and the birds at heart. I knew of a school teacher who for several years has instilled into her children the lessons of kindness to all living things without taking any time that belonged to other studies and without giving herself extra work, that her children are devoted to the cause of humanity. The boys will not rob birds' nests or stone squirrels, the girls know that they ought to feed their pet kitten and their dog, and this sentiment of kindness doubtless makes the children in their family relations much more easily dealt with.

"Nearly all school teachers have certain times when they read stories to the children, and these stories might certainly once or twice in the week be on humane subjects. They also have language lessons, and such little paragraphs as I shall give in this paper every month could be used for that purpose, or they could be the theme of compositions. In such ways lessons of kindness could be impressed on the children. If a teacher is interested in humane education, she can find chances enough to introduce it."